# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 68/11 — 1979 දෙසැම්බර් 26 වැනි බදාදා — 1979.12.26

68/11 ம் இலக்கம்—1979 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

டபிள்யூ. எம். ஏ. விஜேரத்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, திசெம்பர் 24, 1979.

**கட்டளைச்சட்டம்**

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. நீக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 85 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 1974 பெப்பிரவரி 10 ஆம் தேதிய 105/5 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 140 (2) ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைச்சட்டம் எனக் கருதப்பட்டதுமான 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவக நியதிச்சட்டம், மேற்கூறிய நியதிச்சட்டத்தின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், பட்ட வகுப்புக்கு மேற்பட்ட கமத்தொழிற் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப் பின்னர் " நிறுவகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்நிறுவகம், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும்; இப்பல்கலைக் கழகம், இதனகத்துப் பின்னர் " பல்கலைக்கழகம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

5. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்திதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடியவாறாகக் கமத்தொழிற் கல்வியின் அத்தகைய சிறப்புக்கூறுகளில் பட்டவகுப்புக்கு மேற்பட்ட போதனை, பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடுசெய்தல் ;



2—A 47027